# நிலைமாற்றம்: அடுத்த படி

என் குழந்தைக்கு மூன்று வயதாகும்போது என்ன நடக்கும்?



*Individuals With Disabilities Education Act (மாற்றுத்திறனாளிகள் கல்விச் சட்டம், IDEA) பகுதி C இன் கீழ் ஆரம்பகாலச் சிகிச்சை சேவைகள் நிலையிலிருந்து மாறுவதற்கான வழிகாட்டி.*

Early Support for Infants and Toddlers (குழந்தை மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவு) திட்டம், இத்திட்டத்திற்கு Washington மாநில Department of Children, Youth, and Families (குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் துறை) மூலம் நிதியளிக்கப்படுகிறது.

Washington State Department of
**CHILDREN, YOUTH & FAMILIES**

## நிலைமாற்றம் என்றால் என்ன?

உங்கள் குழந்தைக்கு மூன்று வயதாகும்போது, ஆரம்பகாலச் சிகிச்சை சேவைகள் முடிவுபெற்று, புதிய சேவைகளும் ஆதரவுகளும் கிடைக்கக்கூடும். உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்கள் குழந்தைக்கும் குடும்பத்திற்கும் நிகழும் பல நிலைமாற்றங்களில் இந்த மாற்றத்தின் செயல்முறையும் ஒன்றாகும்.

உங்கள் குழந்தைக்கு மூன்றாவது பிறந்தநாள் வருவதற்கு ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு முன்பு, நீங்கள் உங்கள் family resources coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC) மற்றும் உங்கள் குழுவுடன் இணைந்து பாலர் சிறப்புக் கல்விச் சேவைகள் அல்லது பிற தேவையான சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கு மாறுவதற்குத் திட்டமிடுவீர்கள். குடும்பங்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் இந்தச் செயல்பாடு ஊடாக ஒன்றாகச் சேர்ந்து பயணிப்பார்கள், இதன்பிறகு நிலைமாற்றம் தொடர்பான சந்திப்பு நடைபெறும்.

## நிலைமாற்றம் தொடர்பான சந்திப்பு நடைபெறுவதன் நோக்கம் என்ன?

Individualized Family Service Plan (தனிப்பட்ட குடும்பச் சேவைத் திட்டம், IFSP) தொடர்பான சந்திப்பின் போது, நிலைமாற்றம் தொடர்பான செயல்முறை குறித்து உங்களுக்கு வழிகாட்டுவதற்காக, நீங்களும் உங்கள் ஆரம்பகாலச் சிகிச்சைக் குழுவும் சேர்ந்து எழுத்துப்பூர்வமான நிலைமாற்றத் திட்டம் ஒன்றை தயார் செய்வீர்கள்.

Individuals with Disabilities Education Act (மாற்றுத்திறனாளிகள் கல்விச் சட்டம், IDEA) பகுதி C என்பதன் கீழ் உள்ளவர்கள் உங்கள் குழந்தைக்கு மூன்றாவது பிறந்தநாள் வருவதற்கு முன்பு நிலைமாற்றம் தொடர்பாக எழுத்துப்பூர்வ திட்டம் ஒன்றைத் தயார் செய்ய வேண்டும்.

## நிலைமாற்றத்திற்கான திட்டத்தை எப்போது தொடங்குவது?

### உங்கள் குழந்தைக்கு மூன்றாவது பிறந்தநாள் வருவதற்கு ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு முன்பு:

நிலைமாற்றம் தொடர்பான திட்டமிடல் தொடங்குகிறது. உங்கள் குழந்தை மூன்று வயதில் நிலைமாற்றம் அடைவது தொடர்பாக திட்டமிடுவதைத் தொடங்க உங்கள் FRC உங்களுக்கும் உங்கள் பள்ளி மாவட்டத்திற்கும் அல்லது பிற சமூகம் சார்ந்த திட்டங்களுக்கும் இடையேயான தொடர்பை எளிதாக்க வசதி செய்வார்.

### உங்கள் குழந்தையின் மூன்றாவது பிறந்தநாளுக்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன், நிலைமாற்றம் தொடர்பான திட்டமிடல் சந்திப்பு நடத்தப்படும்:

சந்திப்பின் ஒரு பகுதியாக பள்ளி மாவட்ட பிரதிநிதியை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் குழந்தை பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளுக்குத் தகுதி பெறுகிறதா என்பதைத் தீர்மானிக்க என்ன நடக்கும் என்பதை அவர்கள் விளக்குவார்கள்.

பள்ளி மாவட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு, பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளுக்கு உங்கள் குழந்தை தகுதி பெற்றால், Individualized Education Program (தனிப்பட்ட கல்வித் திட்டம், IEP) மூலம் சேவைகள் வழங்கப்படும்.

நீங்கள் பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளைப் பெற விரும்பவில்லை என்றால், பள்ளி மாவட்டப் பிரதிநிதியுடனான சந்திப்பு திட்டமிடப்படாது.

## நிலைமாற்றத் திட்டம் என்றால் என்ன?

உங்கள் குழந்தைக்கு மூன்று வயதாகும்போது உங்கள் குழந்தையும் குடும்பமும் ஆரம்பகால சிகிச்சை சேவைகளைக் கடந்து செல்ல நீங்கள், உங்கள் FRC மற்றும் உங்கள் ஆரம்பகாலச் சிகிச்சை குழு எவ்வாறு உதவுவீர்கள் என்பதை நிலைமாற்றம் தொடர்பான திட்டம் அடையாளம் காட்டுகிறது. உங்கள் குழந்தை உங்கள் உள்ளூர் பள்ளி மாவட்ட பாலர் சிறப்புக் கல்வித் திட்டம் அல்லது பிற சமூகம் சார்ந்த சேவைகளில் பங்கேற்கும்போது அல்லது உங்கள் பிள்ளை தகுதிபெறாததால் ஆதரவுகள் மற்றும் சேவைகளை விட்டு வெளியேறும்போது என்ன ஆதரவுகள், படிநிலைகள் மற்றும் சேவைகள் தேவை என்பதை இந்தத் திட்டம் விவரிக்கிறது.

## என் குழந்தைக்கு அடுத்து என்ன நடக்கும்?

### எனது குழந்தையின் நிலைமாற்றம் தொடர்பான திட்டத்தை உருவாக்குதல்:

திட்டத்தை உருவாக்கிட நீங்களும் உங்கள் ஆரம்பக்காலச் சிகிச்சை குழுவும் இணைந்து செயல்படுவீர்கள். இந்தக் குழுவில் நீங்கள், உங்கள் FRC, இப்போது உங்கள் குழந்தையுடன் செயல்படும் நபர்கள், நீங்கள் ஈடுபடுத்த விரும்பும் பிற நபர்கள் மற்றும் எதிர்காலத்தில் உங்கள் குழந்தையுடன் ஈடுபடக்கூடிய நபர்கள் ஆகியோர் இடம்பெறுவர். இந்தக் குழுவானது உங்கள் குழந்தையின் முன்னேற்றம் மற்றும் தேவைகளைப் பார்வையிடும். நிலைமாற்றம் தொடர்பான திட்டத்தின் மேம்பாட்டை FRC ஒருங்கிணைக்கும்.

## மூன்று வயதில் எனது குழந்தை நிலைமாற்றம் அடைந்தப் பிறகு என்ன சேவைகள் கிடைக்கலாம்?

இது உங்கள் குழந்தைக்கு பாலர் சிறப்புக் கல்விச் சேவைகள் தேவையா என்பதைப் பொறுத்தது. உங்கள் குழந்தை பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளுக்குத் தகுதி பெறுகிறதா என்பதை உங்கள் பள்ளி மாவட்டம் தீர்மானிக்கும். உங்கள் குழந்தை தகுதியுடையவராக இருந்தால், சமூகத் திட்டம், ஹெட் ஸ்டார்ட், Early Childhood Education and Assistance Program (ஆரம்பக்கால குழந்தைப் பருவக் கல்வி மற்றும் உதவித் திட்டம், ECEAP) அல்லது பள்ளி அடிப்படையிலான, பாலர் சிறப்புக் கல்வித் திட்டம் போன்ற பல்வேறு சேவை அமைப்பு விருப்பங்கள் கிடைக்கலாம். சிறப்புக் கல்வி மற்றும் தொடர்புடைய சேவைகள் IEP மூலம் வழங்கப்படும். FRC நிலைமாற்றத் திட்டம் தொடர்பான சந்திப்பை ஒருங்கிணைப்பார். உங்கள் குழந்தையின் IEPயை மேம்படுத்த பள்ளி மாவட்டம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யும்.

IEP சந்திப்பிற்கு உங்கள் FRC ஐ அழைக்குமாறு நீங்கள் கோரலாம். IEP சந்திப்பிற்கு ஆதரவாக நீங்கள் விரும்பும் நண்பர், குடும்ப உறுப்பினர்கள் அல்லது பிற சமூக உறுப்பினரை உங்களுடன் அழைத்து வரலாம். உங்களுக்கு Developmental Disabilities Administration (வளர்ச்சி குறைபாடுகள் நிர்வாக வழக்கு மேலாளர், DDA) அல்லது Children with Special Health Care Needs (சிறப்பு சுகாதார பராமரிப்பு தேவைகள், CSHCN) ஒருங்கிணைப்பாளர் இருந்தால், அவர்களையும் நீங்கள் அழைக்க விரும்பலாம். உங்கள் குழந்தைக்கு மூன்று வயது ஆவதற்கு முன்பு IEP சந்திப்பு நடைபெற வேண்டும் மற்றும் உங்கள் குழந்தைக்கு மூன்று வயது ஆகும்போது IEP நடைமுறையில் இருக்க வேண்டும். IEP சந்திப்புகள் ஆண்டுதோறும் திட்டமிடப்படுகின்றன. இருப்பினும், உங்கள் குழந்தையின் திட்டத்தைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நீங்களோ பள்ளி ஊழியர்களோ நினைக்கும் எந்த நேரத்திலும் நீங்கள் IEP சந்திப்பைக் கோரலாம்.

## எனது குழந்தை பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளுக்குத் தகுதிபெறவில்லை என்றால் என்ன நடக்கும்?

உங்கள் குழந்தை பாலர் சிறப்புக் கல்விச் சேவைகளுக்குத் தகுதிபெறவில்லை என்றால், உங்கள் குழந்தைக்கான ஹெட் ஸ்டார்ட், ECEAP அல்லது பிற சமூகத் திட்டங்கள் போன்ற பிற சாத்தியமான விருப்பங்களைக் கண்டறிய உங்கள் FRC உங்களுடன் இணைந்து செயல்படுவார்.

## நிலைமாற்றம் தொடர்பான செயல்பாட்டில் நமது பங்கு என்ன?

### உங்கள் குழந்தை மற்றும் உங்கள் குடும்பத்தினர் சுமூகமான நிலைமாற்றத்திற்கு எப்படி உதவலாம் என்பதற்கான உதவிக்குறிப்புகள்:

- சந்திப்புகளில் கலந்துகொண்டு, உங்கள் குழந்தைக்கு நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றி பேசுங்கள்.
- சந்திப்புகளில் குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள்.
- வளங்கள் மற்றும் சேவைகளை ஆராயுங்கள்.
- உங்கள் குழந்தையின் செயல்பாடுகள் மற்றும் ஆர்வங்கள் பற்றிய ஒரு குறிப்பேடு வைத்திருங்கள். உங்கள் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ், நோய்த்தடுப்பூசி பதிவு, மருத்துவ அறிக்கைகள், புகைப்படங்கள், மதிப்பிடுதல்கள், மதிப்பீடுகள் மற்றும் கடந்தகால IFSP ஆகியவற்றைச் வைத்திருக்கவும். உங்கள் குழந்தையின் படங்கள் விவரங்களையும் தகவலையும் தனிப்பயனாக்க உதவுகின்றன.
- உங்கள் குழந்தைக்கு என்ன உதவியாக இருக்கும்? அவளுடைய/அவனுடைய தேவைகள் உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் குழந்தையிடம் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதை அறிந்து, உங்கள் குழந்தைக்கு அந்தச் சேவைகளைப் பெற பள்ளி மாவட்டம் மற்றும் IEP குழுவுடன் இணைந்து பணியாற்றுங்கள்.

## நிலைமாற்றத்திற்குப் பிறகு எனது அடுத்த படிகள் என்ன?

உங்கள் மாவட்டத்தில் குடும்ப ஆதரவுக் குழு, உள்ளூர் Parent Teacher Student Association (பெற்றோர் ஆசிரியர் மாணவர் சங்கம், PTSA) அல்லது Special Education Parent Advisory Council (சிறப்புக் கல்வி பெற்றோர் ஆலோசனைக் குழு, SEPAC) உள்ளதா என்று கேளுங்கள். மாவட்டத்தில் குடும்ப சேவை பணியாளர், சமூக சேவகர் அல்லது பள்ளி உளவியலாளர் இருக்கிறார்களா என்று கேட்கவும்; உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால் அவர்கள் உங்களுக்கு உதவ முடியும். உங்கள் குடும்பம் நிலைமாற்ற செயல்முறையின் மூலம் நகரும் போது, ஒரு பெற்றோராக, உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஆதரவு மூலம் நீங்கள் பயனடையலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## வேறு என்ன தகவல்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்?

உங்கள் குழந்தை தற்போது DDA இலிருந்து சேவைகளுக்குத் தகுதி பெற்றிருந்தால், உங்கள் குழந்தைக்கு நான்கு வயதாகும் முன் சேவைகளுக்கான தகுதி மீண்டும் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த நிலைமாற்றச் செயல்பாட்டின் போது, ஆரம்பகாலச் சிகிச்சை மதிப்பீடுகள், நிலைமாற்ற தகவல் மற்றும் பள்ளி மாவட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கை ஆகியவற்றை DDA உடன் பகிர்ந்து கொள்வது உங்களுக்கு முக்கியம். **இந்த தகவலை DDA-க்கு வெளியிடுவதற்கான உங்கள் சம்மதத்தை பள்ளி மாவட்டத்தில் இருந்து நிலைமாற்ற திட்டமிடல் கூட்டத்தில் பெறலாம்.** உங்கள் குழந்தையின் தொடர்ச்சியான தகுதியைத் தீர்மானிப்பதற்கான தகவல் பெறப்படவில்லை எனில், நான்கு வயதில் உங்கள் குழந்தை DDA சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

## கூடுதல் உதவி அல்லது தகவலுக்கு நான் எங்கு செல்லவேண்டும்?



Department of Children, Youth & Families (குழந்தைகள், இளைஞர்கள் & குடும்பங்கள் துறை)இன் Early Support for Infants and Toddlers (குழந்தைகள் மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவுத் திட்டமானது, ESIT) IDEA பகுதி C ஆரம்பகால இடையீட்டு சேவைகளின் மாநிலம் தழுவிய அமைப்பை வழிநடத்துகிறது.

**esit@dcyf.wa.gov**
**www.dcyf.wa.gov**

family resources coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC) கூடுதல் தகவல் மற்றும் பரிந்துரைகளுக்கு, உங்கள் உள்ளூர் பகுதியில் உள்ள FRC இன் பெயருக்கு ஹெல்ப் மி குரோ Washington-ஐத் தொடர்பு கொள்ளவும்.

1-800-322-2588

மழலையர் மையத்தில் Washington மாநில ஃபாதர்ஸ் நெட்வொர்க். சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளைக் கொண்டிருக்கும் அனைத்து ஆண்கள் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவையும் ஆதாரங்களையும் வழங்குகிறது.

(425) 653-4286
**www.fathersnetwork.org**

PAVE என்பது மாநிலம் தழுவிய பெற்றோர் பயிற்சி மற்றும் தகவல் மையமாகும், வயது பிறப்பில் இருந்து வயதுவந்த ஊனமுற்ற குழந்தைகள் (children with disabilities, ages birth through adulthood) கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்குகிறது.

1-800-572-7368 (800-5 PARENT)
**www.wapave.org**

Washington மாநில பேரன்ட் டு பேரன்ட் என்பது மாநிலம் தழுவிய பெற்றோர் நெட்வொர்க் ஆகும், இது குறைபாடுகள் அல்லது வளர்ச்சி தாமதங்கள் உள்ள குழந்தைகளைக் கொண்ட பெற்றோருக்கு உணர்ச்சிபூர்வமான ஆதரவையும் தகவல்களையும் வழங்குகிறது.

1-800-821-5927
**www.arcwa.org/parent-to-parent**

Washington மாநிலத்தின் ஆர்க் கல்வி, உடல்நலம், தன்னிறைவு, சுய-வாதிடுதல், சேர்க்கை மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேர்வுகளை ஊக்குவிக்கிறது.

1-888-754-8798
**www.arcwa.org**

Office of Superintendent of Public Instruction (பொதுக்கல்வி கண்காணிப்பாளர் அலுவலகம் சிறப்புக் கல்வி) மற்றும் தொடர்புடைய சேவைகளைப் பெறும் குழந்தைகளின் குடும்பங்களுக்கு ஒரு பயனுள்ள இணையதளத்தைக் கொண்டுள்ளது: **www.K12.wa.us/SpecialEd/Families/default.aspx**

**Washington மாநில Department of Children, Youth & Families (குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் துறை) Early Support for Infants and Toddlers (குழந்தைகள் மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவு)**

PO Box 40970
Olympia WA 98504-0970
**esit@dcyf.wa.gov**
**www.dcyf.wa.gov/services/child-development-supports/esit**

*அனைத்துத் திட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் பாகுபாடு தடைசெய்யப்பட்டுள்ளது. இனம், நிறம், மதம், நம்பிக்கை, பிறந்த தேசம், பாலினம், வயது அல்லது ஊனம் அடிப்படையில் யாரும் விலக்கப்படக்கூடாது.*

*இந்த ஆவணத்தின் பிரதிகளை நீங்கள் வேறு வடிவத்தில் அல்லது மொழியில் பெற விரும்பினால், தயவுசெய்து DCYF Constituent Relations (DCYF தொகுதித் தொடர்புகள்)-ஐ தொடர்புகொள்ளவும் (1-800-723-4831 | 360-902-8060, **ConstRelations@dcyf.wa.gov**).*

DCYF PUBLICATION FS_0004 | DEL 11-013 TM (07-2023) Tamil